# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC33/2018**

**Deposition of Witness for PW6**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஜெயமணி | Caste | : |
| Father/Husband Name | : | கண்ணாடி சாமி | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( A1 present other absent petition filed and allowed )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை**

நான் பெரியகுளத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். எப்போது கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த31.10.2017அன்று 18.30 மணிக்கு வாலாந்துார் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண் 275/2017 என்ற வழக்கில் சம்பவ இடத்தை எனது மற்றும் ஜெயராஜ் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று

போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 33/2018**

**Deposition of Witness for PW7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர். சந்திரன் | Caste | : | |
| Father/Husband Name | : | ஒச்சாத்தேவர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( A1 present other absent petition filed and allowed )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை**

நான் உசிலம்பட்டியில் அரசு மருத்துவராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 31.10.2017ம் தேதியன்று மதியம் 12.10மணியளவில் மருத்துவ நமூனாவுடன் 30 வயது மதிக்கதக்க பெருமாள் மகன் உக்கிரபாண்டி என்னிடம் தன்னை தெரிந்த நபர்கள் ஐந்து நபர்கள் வந்து கம்பி, அருவாள், கல்லால் தாக்கி தனக்கு காயம் உண்டாகியதாக என்னிடம் கூறினார். அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் 1) 5x4 cm அளவில் காலின் பின்னால் ஒரு சிராய்ப்பு காயமும் 2) வலது பாதத்திற்கு மேல் ஒரு வீக்கக்காயமும் 3) இடது கீழ்காலில் 2x1 cm அளவில் ஒரு சிதைந்த காயம் இருந்தது. 4) வலது நடு கையில் ஒரு சிறிய வெட்டு காயம் இருந்தது. 5) இடது முன் நெற்றியில் ஒரு வீக்கம் இருந்தது. இவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து 2.11.2017 ம் தேதி சிகிச்சையில்இருந்து விடுவிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சாதாரண காயம் என்று மருத்துவ காயச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே நாள் 12.55 மதியம் 70 வயது மதிக்கத்தக்க பெருமாள் மனைவி மூக்காயி என்றா மூக்கம்மாள் தன்னை நான்கு நபர்கள் வந்து கல், கம்பி, அருவாள், சூரி வைத்து தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரை

பரிசோதித்த போது 1x1x0.5 cm அளவிலான சிராய்ப்பு காயம் இடது ஆள்காட்டிவிரலில் கீழ்பகுதியில் காணப்பட்டது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

சாட்சி உக்கிரபாண்டிக்கு இடது கையிலும் கன்னத்திலும் காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன இரண்டு பேருக்கும் மேற்கண்ட காயங்கள் தடுமாறி கீழே விழுந்ததாலும் ஏற்படும் என்றால் சரிதான்.